செ.வெ.எண்: 458 நாள்: 16.11.2021

## திருநெல்வேலி மாவட்டம்

**அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களை ஊக்கவிக்கும் வகையில் பயிற்சி புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்கள்.**

--------------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மானூர் வட்டம், நாஞ்சான்குளம் கிராமத்தில் அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களை ஊக்கவிக்கும் வகையில் பயிற்சி புத்தகங்கள் மற்றும் பயிற்சிக்கு தேவையான உபகரணங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப, அவர்கள் இன்று (16.11.2021) வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், நாஞ்சான்குளம் கிராமத்தில் அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தம்மை தயார்படுத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப, அவர்கள் இக்கிராமத்திற்கு ஆய்வு பணிகள் மேற்கொள்ள சென்ற போது போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் வகைக்கு பயிற்சி புத்தகங்கள் தேவைப்படுவதாக இளைஞர்கள் தெரிவித்திருந்தனர். இப்பகுதி இளைஞர்கள் கோரிக்கையை ஏற்று போட்டி தேர்வுகளுக்கு தயார் செய்து வருவதை ஊக்குவிக்கும் வகையில் இன்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் பயிற்சி இளைஞர்களை நேரில் அழைத்து பயிற்சி புத்தகங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் திருநெல்வேலி வட்டாட்சியர், திரு. சுப்பிரமணியன், மறுவாழ்வுத்துறை தனி வட்டாட்சியர் திரு.செல்வம், மற்றும் அரசு அலுவலர்கள், நாஞ்சான்குளம் இளைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி.**